சமத்துவத்தின் சாரமே
செம்மொழியின் சொந்தமே
அகிலமெங்கும் அலசியும் உன்
அழகிற்க்கு ஈடுயாதுண்டோ!

தென்மேற்கு பருவக்காற்றோ
அமுத நீர் அடை மழையோ,
நெற்பயிர் கதிரோ,
செங்கதிர் மலரோ,
செம்மண் வளமோ,
மாசில்லா சுவாசமோ,
மூலிகை நீரோ,
வானலாவிய மலைமுகடோ

இவை
யாவற்றையும் வட்டுருக்கமாய்
வைத்திருக்கும் வட்டாரம்
வேறெங்கும் உண்டோ!
என் தாய்மண் சுரண்டையைத்
தவிர்த்து.

பிறரை மகிழ வைக்கும்
மாந்தர்களையும்
மதங்களைக் கானா
மைந்தர்களையும்
மாசில்லா மனங்களையும்
மட்டற்ற மகிழ்ச்சியையும்
வழங்கிய
எம் சுரண்டையின்
அருமை பெருமை
தெரியா தாசன் நான்...

காவியத்தின் கலை நயம்
காணவே
இக்கவிதையில் களம்
கண்டேன்

எனவே,

மத நல்லிணக்கம் எனும்
மகுடத்தின் மாணிக்கமாய்
திகழும்
எம்மண் சுரண்டையில் என்னை
உதிக்கச் செய்த இறைவனுக்கு
நன்றி கூறி விடைபெறுகிறேன்

..... இப்படிக்கு
மாணிக்கத்தின் மைந்தன்